**பிஸினஸ் சமூகம் - நகரத்தார்கள்!**

**- நாணயம் விகடன் 29-Jan-2012**




நகரத்தார் சமூகம் பல பிஸினஸ்மேன்களை உருவாக்கி இருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கியே கடல் கடந்து சென்று வணிகம் செய்து வந்தவர்கள் நகரத்தார்கள். இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, வியட்நாம் வரை அவர்களின் ஃபைனான்ஸிங் பிஸினஸ் பரவி இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் பர்மாவின் பிஸினஸை நிர்ணயம் செய்கிற திறமை நகரத்தார் பிஸினஸ்மேன்களுக்கே இருந்தது. திறமையான நிர்வாகம், சரியான திட்டமிடல் மூலம் பர்மாவில் தலைசிறந்து விளங்கினார்கள் நகரத்தார்கள்.

பர்மாவில் பேரும் புகழும் பெற்று விளங்கியவர்தான் ஏ.எம்.முருகப்ப செட்டியார். 1884-ல் பிறந்த முருகப்ப செட்டியார், பர்மாவின் துறைமுக நகரமான மோல்மின் (Moulmein) என்னும் ஊரில் தனது நிறுவனத்தை நடத்தி வந்தார். வெறும் ஃபைனான்ஸிங் பிஸினஸ் என்பதோடு அவர்

தனது வர்த்தகத்தை நிறுத்திக் கொள்ள வில்லை. ரப்பர் வாங்கி விற்பது, இன்ஷூரன்ஸ் உள்பட பல தொழில்களை செய்துவந்தார். இதனால் அதிவிரைவில் அவரது பிஸினஸ் மலேசியா, இலங்கை, இந்தோனேஷியா, வியட்நாம் என பல நாடுகளிலும் பரவ ஆரம்பித்தது.

ஏ.எம்.முருகப்ப செட்டியாரின் முதல் மகனாகப் பிறந்தார் ஏ.எம்.எம்.முருகப்ப செட்டியார். 1902-ல் பள்ளத்தூரில் பிறந்த முருகப்ப செட்டியார், சிறுவயது முதலே படிப்பில் கெட்டிக்காராக விளங்கினார். குடும்பத் தொழிலான ஃபைனான்ஸிங்கை சிறுவயது முதலே தெளிவாக புரிந்துகொண்டு செய்தார். தந்தையும் மகனுமாக அடுத்தடுத்த நாடுகளில் பிஸினஸ் சாம்ராஜ்ஜியத்தை விரித்துக் கொண்டிருக்க, மிகப் பெரிய திருப்பத்தை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது.


ஏ.எம்.முருகப்ப செட்டியார்

1940. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய காலம். இந்த போரில் ஜெர்மனியும் ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. ஜெர்மனியின் நேச நாடாக இருந்தது ஜப்பான். கம்யூனிஸ்ட் நாடான ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயல்படவில்லை என்றாலும், ஹிட்லருக்கு எதிராக போரில் குதித்தது பிரிட்டன்.

ஜெர்மனியின் நேச நாடான ஜப்பான் யார் மீது போர் தொடுப்பது என்று தெரியாமல் தவித்தது. கடைசியில் பிரிட்டிஷ் காலனி நாடுகளை தாக்க முடிவு செய்தது. அப்போது பர்மா, பிரிட்டிஷ் ஆளுகையின் கீழ் இருந்ததால், பர்மா மீது தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலால் பர்மாவின் பொருளாதாரம் சீர்குலைந்தது. அங்கு வியாபாரம் செய்வதற்கு ஏதுவான சூழ்நிலை மாற ஆரம்பித்தது. தவிர, பர்மிய பூர்வ குடிமக்கள் என தங்களை அழைத்துக் கொண்ட சிலர், பர்மாவின் பொருளாதாரத்தை பர்மிய மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று கோஷம் எழுப்ப ஆரம்பித்தனர். அதுநாள் வரை பர்மாவில் பெரும் செல்வாக்கோடு விளங்கிய நகரத்தார்களுக்கு எதிரான சூழ்நிலை

உருவானது. நகரத்தார்கள் சுதந்திரமாக பிஸினஸ் செய்வதற்கு எதிரான சட்டங்கள் போடப்பட்டன.

இனிமேலும் அங்கு நிம்மதியாக பிஸினஸ் செய்ய முடியாது என்பதை புரிந்துகொண்ட நகரத்தார்கள் பர்மாவை விட்டு வெளியேற ஆரம்பித்தனர். அதுநாள் வரை அங்கு கட்டி வைத்திருந்த பல வீடுகள், வாங்கி வைத்திருந்த பல எஸ்டேட்டுகளை அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. பெரும் செல்வத்தைச் சேர்த்து வைத்திருந்த முருகப்ப செட்டியாரின் குடும்பமும் தங்களுடைய சொத்துக்களை எல்லாம் விட்டுவிட்டு, கையில் கிடைத்த சொற்ப தொகையுடன்தான் தாய் தமிழகத்தில் காலடி எடுத்து வைத்தனர்.

ஏ.எம்.எம்.முருகப்ப செட்டியாரும் சரி, அவர் சகோதரர்களான ஏ.எம்.எம்.வெள்ளையன் செட்டியாரும், ஏ.எம்.எம்.அருணாசலம் செட்டியாரும் சரி இதைக் கண்டு கலங்கி சோர்ந்து போய்விடவில்லை. வாழ்க்கையை மீண்டும் ஜீரோவிலிருந்து தொடங்குவதற்கு தயாராகவே இருந்தார்கள். காரணம், சுதந்திர இந்தியாவில் கெடுபிடிகளற்ற சூழ்நிலையில் தங்களால் வெற்றிகரமாக பிஸினஸ் செய்து ஜெயிக்க முடியும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு நிறையவே இருந்தது.

தமிழகத்தில் தொழிற் சாலையை ஆரம்பிக்கும் முன்பே உலகம் முழுக்க சுற்றுப்பயணம் செய்திருந்தனர் முருகப்ப செட்டியார் மற்றும் சகோதரர்கள். உலக பிஸினஸ் எப்படி போய்க் கொண்டிருக்கிறது? நாம் எங்கே இருக்கிறோம்? நம்மால் என்ன முடியும், முடியாது? நமக்கு என்ன தேவை என்கிற கேள்விகளுக்கு அவர்கள் சரியான பதிலை வைத்திருந்தனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த வுடன் 1948-ல் சென்னைக்கு அருகே, இங்கிலாந்தின் டி.ஐ. நிறுவனத்தின் துணையுடன் டி.ஐ. சைக்கிள்ஸ் என்கிற கம்பெனியைத் தொடங்கினர். சுதந்திர இந்தியாவில் மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வேகமாகச் செல்ல வேண்டுமெனில் எல்லோருக்கும் ஒரு சைக்கிள் தேவை. எனவே

அதற்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்து வைத்திருந்ததாலேயே அவர்கள் முதலில் சைக்கிள் கம்பெனியை தொடங்கினார்கள்.

அவர்கள் நினைத்தபடியே டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனம் மிகப் பெரிய வெற்றி அடைய, அடுத்த பத்தாண்டுகளில் இந்த நிறுவனத்திற்குத் துணையாக இருக்கிற மாதிரி வேறு இரண்டு நிறுவனங்களை தொடங் கினார்கள். 1955-ல் டியூப் புராடக்ட்ஸ் ஆஃப் இந்தியா என்னும் நிறுவனத்தைத் தொடங்கினார்கள். சைக்கிள்களுக்குத் தேவையான இரும்பு பைப்புகளை வெளியிலிருந்து வாங்குவதைவிட தாங்களே தயாரித்தால் என்ன என்று யோசித்ததன் விளைவுதான் இந்நிறுவனத்தைத் தொடங்கியதற்குக் காரணம். இன்றைக்கு நவீன மேனேஜ்மென்ட் சிந்தனையாளர்கள் 'பேக்வேர்ட் இன்டெக்ரேஷன்' என்று சொல்வதை 1950-களிலேயே யோசித்து செய்தவர்கள் முருகப்ப செட்டியார் மற்றும் சகோதரர்கள்.

இதுபோலவே 1960-ல் சைக்கிள்களுக்கான செயினை தயாரிப்பதற்காக டி.ஐ. டயமண்ட் செயின் நிறுவனத்தையும் தொடங்கினார்கள்.

இது மட்டுமல்ல, தமிழகத்தில் இருந்துகொண்டு உலக கண்ணோட்டத்துடன் செயல்பட ஆரம்பித்த முதல் கம்பெனி என்றால் டி.ஐ. நிறுவனம்தான். இந்த நிறுவனத்தின் 50 சதவிகித போர்டு மெம்பர்கள் ஐரோப்பியர்கள் என்பது முக்கியமான விஷயம்.

1954-ல் அமெரிக்காவின் கார்ப்போரண்டம், இங்கிலாந்தின் யுனிவர்சல் கிரைண்டிங் வீல் கம்பெனிகளுடன் இணைந்து இன்னொரு நிறுவனத்தை தொடங்கினார்கள். ஆரம்பத்தில் வெறும் 1.9 கோடி ரூபாய் சம்பாதித்த இந்த நிறுவனம் இன்றைக்கு பல ஆயிரம் கோடி ரூபாயை சம்பாதிக்கிறது.

இன்று இன்ஜினீயரிங், ஃபைனான்ஸ், ஜெனரல் இன்ஷூரன்ஸ், சர்க்கரை உற்பத்தி, உரம் தயாரிப்பு, சைக்கிள் தயாரிப்பு என 28 பிஸினஸ்களாக விரிந்திருக்கிறது முருகப்பா குழுமம். 2011 மார்ச் நிலவரப்படி இந்நிறுவனத்தின் மொத்த டேர்ன்ஓவர் 17,051 கோடி ரூபாய். இந்த

மகத்தான வெற்றி நகரத்தார்களின் பிஸினஸ் திறமைக்கு இன்னொரு பெரிய சான்று.